யிக்கப்பட்டு அண்மையிலே 4, 5 மாவட்டங்களில் 50 ஆயிரம் பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே இரண்டு முறைகள் நடத்தப்பட்டிருக்கிறது. இரண்டாவது முறையாக நவம்பர் மாதத்திலே தொடங்கி இந்த ஆண்டிலே ஐயாயிரம், ஆறு ஆயிரம் என்ற அளவிலே இருப்பதை 10 ஆயிரம் என்ற அளவுக்குச் செய்துகொள்ளக்கூடிய முறையிலே முயற்சிகள் செய்யப்பட்டுவருகின்றன. அண்மையிலே இதிலே ஒரு புது ஊக்கம் ஏற்பட்டிருக்கிறது. அது நாட்டுக்கு நல்லதை விளைவிக்கும் என்று நம்புகிறேன்.

திரு. மு. சுருளிவேல் : தலைவர் அவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் ஏற்றவர்களுக்குப் பரிசு வழங்குகின்றபொழுது எல்லோருக்கும் ஒரே சீராகப் பரிசு வழங்காமல்—படித்தவர்கள் இந்த விஷயத்தை உணர்ந்திருக்கின்ற காரணத்தினாலே—படிக்காத கிராமப்புற விவசாயிகளுக்குச் சிறப்புப் பரிசுகள் கொடுக்கக்கூடிய வகையில் திட்டம் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே பரிசு என்பது அவரவர்களுக்கு வழங்கப்படுகிற உதவித் தொகை ஈட்டுத் தொகை அல்ல; உதவித் தொகை, ஈட்டுத் தொகை என்பது எல்லாம் அறுவைச் சிகிச்சை செய்து ஆறுநாட்கள் அங்கே தங்கியிருக்கின்ற நேரத்தில் அவர்கள் தங்களுடைய பணிகளைச் செய்யமுடியாத காரணத்தினாலே அவை வழங்கப்படுகின்றன. பரிசுத் தொகை என்று கூறப்படுவது அதிலே ஊக்கம் ஏற்படுத்துவதற்காக ஒரு போட்டி மனப்பான்மையை—நம்முடைய பகுதியிலே அதிகமாக செய்திருக்கிறோம்—என்ற வகையிலே போட்டி மனப்பான்மையை உண்டாக்கக்கூடிய வகையிலே கவர்ச்சிக்காகத்தான் தரப்படுவதாகும். எல்லோருக்கும் தரப்படுவதல்ல, எல்லோருக்கும் தரப்படுவது என்றால் அது பரிசல்ல. போட்டியை உருவாக்கி இதிலே ஊக்கத்தை ஏற்படுத்தவும் கவர்ச்சியை உண்டாக்கவும்தான் நிறைவேற்றப்படுகின்ற ஒன்றாகும்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்கள் மட்டும்தான் அமல் படுத்தி வருகிறார்கள். மற்ற மதத்தைச் சார்ந்தவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் ஈடுபாடு கொள்வதில்லை. ஆகவே 3, குழந்தைகள் பெறும் யாராகயிருந்தாலும் அவர்களுக்கு வரிபோடுவது என்ற முறையைக் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள்தான் ஈடுபாடு கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய மனப்பான்மையிலிருந்து விலகாமல் உள்ள நிலையில் இந்துக்களில்கூட சிலர் ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால் முஸ்லீம் களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ இருப்பவர்களில்கூட தெளிவற்ற நிலையிலிருந்து மாறி, மதப்பற்றிலிருந்து சற்று விலகி இதை ஏற்றுக்கொள்ள பலர் முன் வந்திருக்கிறார்கள். முன்பு குடியரசுத் தலைவராயிருந்த டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் இப்படிப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு நாட்டுக்குத் தேவை என்று அவர்களேகூடத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இந்து, முஸ்லீம் என்பது அல்ல, அவரவர்கள் மனப்பான்மையைப் பொறுத்ததாக இது

இருக்கிறது. உள்ளபடி 3 குழந்தைகள் பெறுவது தவறு என்று அறிவுரை கூறலாமே தவிர, அதற்கு வரிபோட ஆரம்பித்தால் வரி விலக்கிற்குப் பலர் வேண்டுகோள் விடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அதற்கு எதிர்க்கட்சித் தலைவாவர்களேகூட தலைமை வகிப்பாரோ என்ற சந்தேகமும் இருக்கிறது.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவாவர்களே, குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்பொழுது ஆசிரியர்களைப் பயன்படுத்துவது சம்பந்தமாக விளக்கங்களைக் கூறினார்கள். பரவலாக கிராமப்புறங்களில் ஆசிரியர்கள் அன்றாடம் பழகும் காரணத்தால் அரசு எண்ணுகின்ற எண்ணத்தை நிறைவேற்றும்வகையில் அவைகளை எடுத்துச் சொல்லிவருகிறார்கள். ஆனாலும் கிராமப்புறங்களிலுள்ள மக்களிடையே ஒருவிதமான அச்ச உணர்வும், ஒருசில குறைபாடுகளும் இருப்பதாகப் பயப் படுகிறார்கள். அப்படிப்பட்ட குறைகளைச் சரியாகக் கண்டறிய வட்ட ரீதியில், மாவட்ட ரீதியில் சட்டமன்ற உறுப்பினர்களையும், ஊராட்சி ஒன்றியத் தலைவர் களையும் கொண்ட குழுவை அமைக்க அரசுக்கு எண்ணம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவாவர்களே, எதிர்காலத்தில் மக்களிடையே இந்தக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் செம்மையாகப் பரவ சட்டமன்ற உறுப்பினர்களையும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் அரசு நம்பியிருக்கிறது.

திரு. கா. காளிமுத்து: தலைவாவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ், நீண்ட காலமாகத் திருமணம் ஆகாமல் இருக்கும் பிரம்மச்சர்யத்தை கடைப்பிடிக் கின்றவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவாவர்களே, பிரம்மச்சர்யம் இரண்டு காரணங்களால் கடைப்பிடிக்கப்படுகின்றது, ஒன்று மன உறுதியினால். மற்றொன்று, கையாலாகாத நிலைமையினால்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவாவர்களே, நாட்டு நிலைமையை உத்தேசித்து மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவது மிகமிக அவசியமாக இருக்கிறது. ஆகவே, வளர்ந்துவரும் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துவதன் மூலம், இந்தக் குடும்ப நலத் திட்டத்திற்குப் பரிசு கொடுப்பது என்ற முறையை மாற்றி, கட்டாயமாக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஒவ்வொருவரும் கொள்ள வேண்டுமென்ற முறையிலே, இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருக்கக்கூடாது என்ற சட்டத்தைக் கொண்டுவர அரசு முயற்சியெடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவாவர்களே, அப்படிப்பட்ட சட்டத்தைப்பற்றி மிக ஆழமாகப் பரிசீலிக்கவேண்டும். சமுதாயத்திலுள்ள பல்வேறு மக்களுடைய தனி உரிமை பாதிக்கப்படுகிறது என்ற நிலைமை ஏற்படும். ஆகவே, அதற்குத் தேவையான பொதுக் கருத்தை உருவாக்குவதில் நாம் அக்கறை காட்ட வேண்டும்.

திரு. எம். செல்வராஜ்: பேரவைத் தலைவாவர்களே, இந்தத் திட்டத்தைக் கவர்ச்சிகரமாக ஆக்கினால் நாட்டு மக்கள் அதைப் பின்பற்றுவார்கள். எனவே அவர்களுக்கு முன்னோடியாக சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும்

இதுவரை யார் யார் கருத்தடை செய்து கொள்ளாமல் இருக்கிறார்களோ அவர்களெல்லாம் அறுவை சிகிச்சை செய்து கொள்ள இந்த அரசு வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, எல்லோருக்கும் உள்ள உரிமையில் முதல் சலுகை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும்தான். ஆகவே இதைச் செய்துகொள்ளுபவர்களுக்கு வரவேற்பு கொடுக்கலாம், வாழ்த்துப் பத்திரம்கூட வழங்கலாம். எனவே தாராளமாகச் செய்து கொள்ளலாம்.

திரு. நா.வீராசாமி : தலைவரவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் மாவட்டங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் பரிசுகள் அளிக்கிறது. இதை இன்னும் அதிகமாக ஊக்குவிக்க "கேர்" நிறுவனம் முன்வருவதாக நான் அறிகிறேன். எனவே அதை அரசாங்கம் அணுகியிருக்கிறதா? அப்படியானால் விவரம் என்ன? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கேரளாவிலே ஒரு இடத்திலே நடைபெற்றதாக அறிகிறேன். அவர்களுடைய உதவியைக் கேட்க நம்முடைய அரசாங்கம் அணுகியது. ஆனால் அவர்கள் இந்த ஆண்டுதான் உதவ முடியும் என்று தெரிவித்தார்கள். அடுத்த ஆண்டு பரிசிலிக்கும் என்று சொல்லியிருப்பதாக நான் அறிகிறேன். இதை உறுதிப்படுத்த பின்னர்தான் இயலும்.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே அறுவை சிகிச்சை செய்துக் கொள்ளும் நபர் ஒன்றுக்கு 30 ரூபாய் அளிப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆனால் அவர்களுக்கு மொத்தம் நபர் ஒன்றுக்குச் செலவாகும் தொகை 300 ரூபாய் என்று சொல்லப்படுகிறதே. எனவே அவர்களுக்கு 150 ரூபாயாவது கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்காக ஆகும் செலவு 300 ரூபாய் அல்ல. ஆனால் மொத்தமாக குடும்ப நலத்திட்டத்தை நிறைவேற்ற ஏற்படுத்தப்பட்டிருக்கும் அமைப்புகள், நிர்வாகங்கள், ஆங்காங்குள்ள மருத்துவமனைகள் போன்ற இவைகளுக்காக அந்த 300 ரூபாய் என்பது கணக்கு. ஆனால் அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு வழங்கப்படுவதைத் தவிர, 10 ரூபாய் அழைத்து, வருபவர்களுக்கு தரப்படுகிறது. தவிரவும், அவர்கள் அங்கே தங்கியிருக்கக்கூடிய நேரத்தில் அவர்களுக்கு அளிக்கப்படும் உணவு முதலியவைகளுக்காக 30 ரூபாயும் சில நேரங்களில் 50 ரூபாயும் ஆகிறது. ஏறத்தாழ 80 ரூபாய், 90 ரூபாய் அளவிற்கு சிக்ச்சையைச் செய்து கொள்பவர்களுக்குச் செலவாகிக்கொண்டு போகிறது. எனவே 150 ரூபாய் வழங்குவது என்பது இயலாது. உண்மையாகவே, இது அவர்களுக்கு உதவி செய்யும் திட்டமே அல்ல, அவர்கள் இதைக் கெடுதல் செய்யும் திட்டம் அல்ல என்பதை உணராத காரணத்தினால் இந்தத் தொகை அளிக்கப்படுகிறது. இதில் 30 ரூபாய் என்பது முக்கியமல்ல. அவர்களுக்கு அந்த 6 நாட்களுக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தை ஈடுசெய்வதுதான் அதன் நோக்கமே தவிர இது நஷ்ட ஈடு அல்ல.

1971 அக்டோபர் 25]

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, பஞ்சாப் மாநிலத்தில் இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கும், பணியாற்றிருக்கும் மருத்துவ நிபுணர்களுக்கும் பரிசுகள் வழங்குகிறார்கள். தமிழக அரசு மருத்துவ நிபுணர்களுக்கு மட்டும் பரிசுகளை வழங்காமல் இந்தத் துறையை வெற்றிகரமாக நடைபெறச் செய்யும் விளம்பரப் பொறுப்பை ஏற்றிருக்கும் அதிகாரிகளுக்கும் பரிசுகளை வழங்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, இதிலே பல்வேறு வகையான பரிசுகள் இருக்கின்றன. முழுவதையும் பரிசீலனை செய்து பார்த்துவிட்டு அங்கத்தினர் அவர்கள் ஆலோசனை கூறுவது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் மாவட்டங்களிலுள்ள நிலையங்கள் என்பது போன்ற பல்வேறு வகையான பரிசுகள் இருப்பதால் இதை இன்னும் விரிவுபடுத்த வேண்டுமா என்பது ஆழ்ந்த பரிசிலனைக்குரியதாகும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, மத்திய சர்க்கார் இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்கனவே கொடுத்துள்ள மானியத்தில் இப்பொழுது அதிகமாகக் கொடுக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஏற்கனவே வாசக்டமி என்ற அறுவைக்கு 30 ரூபாய், 10 ரூபாய் என்ற விகிதத்திலே முன்பு வழங்கப்பட்டது. இப்பொழுது 'டு பெக்டமி' என்ற, பெண்களுக்குச் செய்யப்படும் சிகிச்சைக்கு, அதுவும் 'டிரான்ஸ் வெஜினல் டுபெக்டமி' அறுவை சிகிச்சைக்காக கேம்புகளில் நடத்தப்படுபவைகளுக்காக என்றால் மேலும் 30, 40 ரூபாய் அளவிற்கு ஒவ்வொரு அறுவைக்கும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது கேம்புகளில் நடைபெறும் திட்டமாக இருப்பதால் எல்லா இடங்களிலும் விரிவுபடுத்த முடியாது. சிறந்த நிபுணர்களைக் கொண்டுதான் அது நடத்தப்படுகிறது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும் பெண்ணுக்குச் சேலையும், ஆண்களுக்கு வேட்டி சட்டையும் கொடுக்க அரசு முன்வந்தால் அக்கறையோடு மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற கருத்து இருக்கிறதே, அரசு இதைப் பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் உள்ள நிலைமைகளுக்கேற்ப மாவட்ட ஆட்சியாளர்களால் அது நிர்மானிக்கப்பட்டு அரசாங்கத்தினுடைய அனுமதியோடு சில இடங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக ஆண்களைவிட பெண்கள்தான் அதிகமாகக் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள முன் வருகிறார்கள். எனவே அவர்களுக்குப் பரிசு கொடுத்து ஊக்குவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அவர்களுக்கும் சிறப்பு வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. பரிசுத் திட்டத்திலே அவர்களும் இடம் பெற முடியும் என்றே நான் நம்புகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: சார், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கேற்ப கருச்சிதைவு செய்து கொள்வதைச் சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட வேண்டுமென்ற ஆலோசனை இருந்ததே, இது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நாடாளுமன்றத்தில் கருச்சிதைவுப்பற்றி ஒரு சட்டம் நிறைவேறியிருக்கிறது. சில விதிமுறையொட்டி கருச்சிதைவு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

Poultry Units in rural areas

* 53 Q.—THIRU B. VEKATASWAMY: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to afford financial aid for the expansion of poultry units in large scale in rural areas; and

(b) if so, when the schemes will be implemented?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் நிதி உதவியுடன் இராமனாதபுரம் மாவட்டம், விருதுநகர் கோழி மும்முர வளர்ப்பு வட்டாரப் பகுதியில் கோழி வளர்ப்புக்கான திட்டம் ஒன்றை கால்நடை வளர்ப்புத்துறை இயக்குநர் அனுப்பியுள்ளார்.

(இ) இத்திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளது. கூடிய விரைவில் செயல்படுத்தப்படுவதற்காக இத்திட்டம் அனுமதிக்கப்படும்.

மதுரையில் நைலான் வலை தொழிற்சாலை.

* 54 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

மதுரையில் நைலான் வலை தொழிற்சாலை அமைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

கிராம அதிகாரிகள்.

* 55 வினா—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழகத்தில் உள்ள அரசாங்க அதிகாரிகளாகப் பணியாற்றும் மணியக்காரர், கணக்கப்பிள்ளை இவர்களை முழு நேர ஊழியராக்க திட்டம் ஏதேனும் தற்சமயம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர்: இம்மாதிரி வேலை பார்ப்பவர்கள் தனியார் கம்பெனிகளில் வேலை பார்க்கலாமா? இவர்கள் பகுதி நேர ஆட்களாக வேலை பார்க்கலாமா?

1971 அக்டோபர் 25]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசாங்க உத்தியோகம் தவிர வேறு எங்காவது வேலை பார்க்க வேண்டுமென்றால் அரசாங்க ஆணை பெற வேண்டும்.

திரு. கே. என். குமாரசாமி : கிராமப் பணியாளர்களாக இருப்பவர்களை முழு நேர ஊழியர்களாக நியமிக்க வேண்டுமென்று அவர்களுடைய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதே அடிப்படையில் பஞ்சாயத்து பில் கலெக்டர்களாகப் போடுவதிலும், இவர்களையே பில் வசூல் செய்வதற்கும் நியமிப்பதன் மூலம் கூடுதல் வருவாய் கிடைக்குமாதலால் இது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இவர்களை முழு நேர ஊழியர்களாக ஏற்றுக் கொள்ளுவதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. பஞ்சாயத்து பில் கலெக்டர் போடுவதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. ஊராட்சி வரியை இவர்கள்தான் வசூலிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. அ. ஆறுமுகம் : தற்போது கிராமாதிகாரிகள் நிரந்தரமாக ஒரே கிராமத்தில் இருக்கிறார்கள். அவர்களை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை கிராமத்தை விட்டு கிராமம் மாற்ற அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. நா. வீராசாமி : கிராமாதிகாரிகளை நியமிப்பதற்கு குறைந்தபட்ச படிப்பு எஸ்.எஸ்.எல்.சி. வரை வைப்பதற்கான செயற் குறிப்பு முன்பு அரசாங்கத்திடம் இருந்தது. வருங்காலத்தில் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள்தான் கிராமாதிகாரிகளாக நியமிக்கப்பட வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்போதே அதுதான் விதியாக இருக்கிறது. கிராம உத்தியோகஸ்தர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டுமென்றால் அவர்கள் 11-வது வகுப்பு தேறி இருக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. 40 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டுமென்றும் விதி இருக்கிறது. கிராமத்தில் எவ்வளவு வசூல் ஆகிறதோ அதற்கு மேல் சொத்து இருக்க வேண்டுமென்றும் விதி இருக்கிறது.

திரு. கா. காளிமுத்து : புதிதாக நியமிக்கப்படுகின்ற கிராம அதிகாரிகளை ஊர் விட்டு ஊர் மாற்றுவதை விட கோட்ட எல்லைக்குள் மாற்றுவதற்கு உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தற்சமயம் அந்த யோசனை இல்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : புதிதாக கிராம உத்தியோகஸ்தர்களை நியமிக்கும்போது பயிற்சி பெறாதவர்கள் முன்வரும்போது சலுகை அளித்து எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களை நியமிக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எங்காவது பயிற்சி பெற்றவர்கள் கிடைக்கவில்லை என்றால் பயிற்சி பெறாதவர்களுக்கு இருக்கும் தகுதியை வைத்து நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. தி. பொன்னுமலை: கிராமாதிகாரிகள் முழு நேர ஊழியர்களாக இல்லாத காரணத்தால் அவர்கள் லோன்களை எல்லாம் வசூல் செய்வதில் கால தாமதமாகிறது. கடன்களை மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு வசூல் செய்வதும், சென்ற ஆண்டுக் கடனை இந்த ஆண்டு, வசூல் செய்வதுமான நிலைமைகள் இருக்கின்றன. கட்டிவிட்டவர்களைக் கூட திரும்பக் கட்டும்படி சொல்லும் நிலை இருக்கிறது. அவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்குவதோடு ஒவ்வொரு ஆண்டும் ஆடிட் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எங்காவது அப்படி கிராம அதிகாரிகள் தவறு செய்தார்கள் என்றால் அதனை அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கன்னியாகுமரி ஜில்லாவில் உள்ள கிராம அதிகாரிகள், சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக நியமனம் பெற்றவர்கள் ஓய்வு பெற்ற பிறகு அவர்களுக்குப் பென்ஷன் வழங்கப்படவில்லை. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக் கேள்வி போடவும்.

திரு. ஆ. பரந்தாமன்: இந்த கிராமாதிகாரிகள் குவாசி கவர்ன்மென்ட் நிறுவனங்களில் பல பொறுப்புகளில் இருக்கிற காரணத்தால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இந்தச் சங்கடங்களைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: என்ன சங்கடங்கள் என்று சொல்லவில்லை. சங்கடங்களைத் தெரிவித்தால் அவைகளைப் பற்றி யோசிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Though these village officers are not permanent Government servants, yet they are hard-working and faithful servants. Considering their faithfulness will the Government consider giving them provident fund or pension benefits?

THE HON. THIRU P. U. SHANMUGHAM: There is no such proposal now.

TRUTH ALONE TRIUMPHS

பட்டாக்கள் வழங்கல்.

* 56. வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

பட்டாக்கள் வழங்கும் முழு அதிகாரத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. சு. துரைசாமி: பட்டாக்கள் வழங்குவதில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முழு அதிகாரமும் இல்லாததன் காரணமாக ரெவின்யூ போர்டுக்கு வந்து நாலைந்து வருஷ காலம் கடந்து விடுகிறது. அந்தக் குறைபாட்டைப் போக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கே பட்டா வழங்குவதற்கான அதிகாரித்தைக் கொடுக்க அரசு முன்வருமா ?